17.10.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.205/2018</u>

அ.சா.36

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீத்தாராமன் | | |
| த/பெ | ஸ்ரீனிவாசன் | | |
| கிராமம் | ராணிபேட்டை | தொழில் | காவல் துணை காண்காணிப்பாளர் |
| தாலுக்கா | ராணிபேட்டை | வயது | 67/2025 |
| மாவட்டம் | ராணிபேட்டை | தேதி | 17.10.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் துணை கண்காணிப்பாளராக பணி செய்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2015 ஆம் வருடம் விழுப்புரம் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்த போது, 07/05/2014ம் தேதி விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட ஒருவர் இறந்து விட்டதாக தகவல் கிடைத்தது. காவல் நிலைய மரணம் என்ற காரணத்தினால், சட்டம் ஒழுங்கு பிரச்சனை எதுவும் ஏற்படாமல் இருக்க, என் எல்லைக்கு உட்பட்ட விழுப்புரம் நகர காவல் ஆய்வாளர் பழனி மற்றும் காவலர்கள்

விழுப்புரம் இருப்புப் பாதை காவல் நிலையத்திற்கு வரச் சொல்லி நானும் அங்கு சென்றேன். விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலையத்தில் இருந்த பெண் காவலர் சித்ரா மற்றும் சில காவலர்களை விசாரணை செய்து, ரயிலில் புத்தகம் விற்பனை செய்யும் ஜெயவேலு என்பவரை திருட்டு வழக்கில் விசாரணை செய்தபோது, காலை 10 மணிக்கு உடல்நிலை மோசமாகி விட்ட காரணத்தினால், விழுப்புரம் இருப்பு பாதை காவல் நிலைய ஆய்வாளர் வாசுதேவன் அவர்கள் மற்றும் காவலர்கள் தங்களது காவல் வாகனத்தில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறினார். ஜெயவேலு என்பவர் விழுப்புரம் இருப்புப் பாதை காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் காவலர்கள் மீது உயரதிகாரிகளுக்கு அளித்த புகாரை அன்றுதான் நான் படித்துப் பார்த்ததை நினைவில் கொண்டு அந்த மனுவை எடுத்து வரச் சொல்லி என் அலுவலகத்திற்கு தகவல் கூறி அந்த மனுவை எடுத்து வர சொன்னேன். அந்த மனு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து எனக்கு 5, 6 தேதிகளில் என் பார்வைக்கு அனுப்பப்பட்டது. 07/05/2014 ம் தேதி பிற்பகல் 2.00 மணிக்கு விழுப்புரம் இருப்புப்பாதை காவல் நிலைய ஆய்வாளர் வாசுதேவன் அவர்கள், அங்கு வந்தார்கள். அவரிடம் என்ன நடந்தது என்று நான் கேட்டபோது, திரு. அசாரியா என்பவர் ரயிலில் பயணம் செய்ய விழுப்புரம் ரயில்வே நிலையத்திற்கு வந்தபோது, ஜெயவேலு என்பவர் பணத்துடன் கூடிய மணிபர்சை திருடிவிட்டதாகவும், திருட்டு வழக்கில் ஜெயவேலுவை விசாரணை செய்தபோது, அவர் இறந்துவிட்டதாகவும் கூறினார். நான் மீண்டும் அந்த மனுவை படித்துப் பார்த்தபோது, விழுப்புரம் இருப்புப் பாதை காவல் நிலைய ஆய்வாளர் வாசுதேவன் அவர்கள், ஆய்வாளரின் ஓட்டுநர் திருக்குமரன், மற்றும் பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த ஒரு காவலர், 05/04/2014 ம் தேதி தன்னை போலீஸ் ஜீப்பில் கடத்தி சென்று கொலை செய்யும் நோக்கத்தோடு அடித்து துன்புறுத்தியதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மனுவை இருப்புப் பாதை ஆய்வாளர் வாசுதேவனிடம் காட்டி மனுவில் குறிப்பிட்டுள்ளது

போல் நடந்துள்ளதே என்று கூறினேன். அவர் மனுவை படித்துவிட்டு பதில் எதுவும் கூறவில்லை. பின் இருப்புப் பாதை துணை கண்காணிப்பாளர் தனவேல் அங்கு வந்தார். அவரிடம் ஆய்வாளர் வாசுதேவன் அவர்கள் ஜெயவேல் இறந்தது சம்பந்தமாக புகார் மனுவை கொடுத்தார். காவல் நிலைய மரணம் சம்பந்தமாக துணை கண்காணிப்பாளர் தனவேல் அவர்கள் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார். நானும், காவல் ஆய்வாளர் பழனி, மற்றும் காவலர்கள் விழுப்புரம் நகரத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை எதுவும் ஏற்படாமல் இருக்க பணி செய்தோம். மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்து நான் பெற்ற ஜெயவேலு என்பவர் அனுப்பிய புகாரை நான் ஆய்வாளர் பழனிக்கு மேலோப்பம் செய்து விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க சொன்னேன். காவல் கண்காணிப்பாளரிடம் இருந்து வந்த மனு எண் P2/18119/1241 ஆகும். நான் ஆய்வாளர் பழனிக்கு அனுப்பிய என்னுடைய அலுவலக எண் C.N0.491/SDOB/VPM ஆகும். என்னிடம் காட்டப்படுவது தான் அந்த மேலொப்பம் ஆகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அத்துடன் 3 பக்கங்கள் கொண்ட ஜெயவேலுவின் புகாரினை காவல் கண்காணிப்பாளர் எனக்கு அனுப்பி வைத்ததாகும். ஆவண எண் 36 ல் மேலொப்பம் உட்பட 7 பக்கங்கள் கொண்டவை அ.சா.ஆ.33 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக குற்றப்பிரிவு, குற்றப்புலனாய்வுத்துறை, காவல் ஆய்வாளர் வேலூர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>1, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

ஜெயவேல் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியதாக சொல்லப்படும் கடிதத்தில், 28/04/2014 -ல் அனுப்பப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதில் 05/04/2014 தேதியில் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த

சம்பவம் கோலியனூரில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கு பின்னிட்டு அவர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான எந்தவிதமான ஆதாரமும் இருப்பதாக அவர் சொல்லவில்லை என்றால் சரிதான். அதற்கு என்ன காரணம் என்றும் அவர் சொல்லவில்லை என்றால் சரிதான். அதன் பின்னிட்டு ரயில்வே மைதானத்திற்கு வந்ததாகவும், ரயில்வே மைதானத்திலிருந்து எந்த தேதிக்கு அவர் ஊருக்கு சென்றதாகவும், விவரங்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். தற்போது இந்த மனுவில் 05/04/2014 க்கு பிறகு சம்பவம் பற்றி அவருடைய மனைவியிடமோ, உறவினரிடமோ, எதுவும் சொன்னதாக இல்லை என்று சொன்னால் சரிதான். அதன்பின்னிட்டு ஊருக்கு போய்விட்டு திரும்ப விழுப்புரம் வந்தது போல உள்ளது என்றால், மீண்டும் விழுப்புரம் வந்தது போல தான் உள்ளது. எங்களது கேம்ப் அலுவலகத்திற்கும், ரயில்வே இருப்புப் பாதை காவல் நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கிறது என்றால், சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும். எஸ் பி அலுவலகத்திற்கும், ரயில்வே இருப்புப் பாதை காவல் நிலையத்திற்கும் இடையில் சுமார் 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும். எந்த தேதியில் ஜெயவேல் ஊருக்கு வந்தார், எந்த தேதியில் அவரை மிரட்டினார்கள் போன்ற எந்த விவரமும், ஜெயவேலுவின் மேற்படி புகாரில் இல்லை என்று சொன்னால் சரிதான். வாசுதேவனை விசாரணை செய்வதற்கு முன்பு, இந்த கையெழுத்து ஜெயவேல் என்பவருடையதுதானா? என்பதற்கு இறப்பதற்கு முன்பு ஜெயவேல் என்பவர் எழுதிய ஆவணங்கள் எதையாவது ஜெயவேல் என்பவரின் வீட்டிலிருந்து வரவழைத்து பார்த்தேனா? என்றால் இல்லை. இது சம்பந்தமாக ஜெயவேலின் உறவினர் யாரையும் நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாசுதேவனை விசாரித்தேன் என்றும், அவர் மௌனமாக இருந்தார் என்றும் நான் வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றும், வாசுதேவன் அவரை நான் விசாரணை செய்த போது இதுபோன்று சம்பவமே

நடைபெறவில்லை என்றுதான் கூறினார் என்று சொன்னால் சரியல்ல. ஜெயவேல் இறந்த பிறகு தான் இந்த மனு எனது பார்வைக்கு வந்தது என்றால் சரிதான். எஸ் பி அலுவலகத்தில் இருந்து எனக்கு வந்தது 6ம் தேதி கிடைக்கப்பெற்றது. இதில் காவல் கண்காணிப்பாளர் தவிர, சுமார் 9 நபர்களுக்கு மனு அளிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வாசுதேவனை நான் விசாரித்த போது அவர் மவுனமாக இருந்தார் என்று எழுத்துப்பூர்வமாக எதுவும் கொடுக்கவில்லை. இதற்குப் பிறகு நீதித்துறை நடுவர் தலைமையில் ஒரு விசாரணை நடந்தது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னை விசாரிக்கவில்லை. கிட்டத்தட்ட 1 ½ வருடம் கழித்து 2016 ஆம் ஆண்டு தான் என்னை சிபிசிஐடி போலீசார் விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். ஆனால் அதற்கு முன்பு ஒரு தடவை ஆய்வாளர் என விசாரணை செய்தார். இந்த தகவலை நான் என்னை சிபிசிஐடி போலீசார் விசாரணை செய்தபோது சொல்லியுள்ளேன். ஆய்வாளர் பழனி ஒரு அறிக்கையை தாக்கல் செய்தார் என்றால் அதை நான் பார்த்துள்ளேன். ஆய்வாளர் தனது அறிக்கையில் 07/05/2014 தேதியில் நடந்த சம்பவத்தின் அடிப்படையில் விசாரணை நடந்து வருவதாலும், இதுகுறித்து துறை வாரியான நடவடிக்கை எடுக்கப்பட்டதாலும், நான் மேற்கொண்டு விசாரணை செய்யவில்லை என்று தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள புகாரில் உள்ள கையெழுத்து ஜெயவேல் என்பவருடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. ஜெயவேல் என்பவர் அனுப்பியதாக சொல்லப்படும் கடிதத்தை எஸ் பி அலுவலகத்தில் எப்போது பெற்றுள்ளார்கள் என்ற விவரம் உள்ளதா? என்றால் இல்லை. இந்த ஆவணமானது எஸ் பி அலுவலகத்தில் பெறப்பட்டது போல வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், நான் சிபிசிஐடி விசாரணைக்கு அனுசரனையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>2, 4, 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள புகாரில் உள்ள கையெழுத்து ஜெயவேல் என்பவருடையது அல்ல என்று சொன்னால் என்னால் மறுக்க முடியாது. இந்த புகார் மனுவானது ஜெயவேல் என்பவர் இறந்த பிறகு பெறப்பட்டதா? என்றால் ஆமாம் அவர் இறந்த பிறகு பெறப்பட்டது. அந்த மனு அனுப்பிய தேதி 28/04/2014 என்று உள்ளது என்றால் சரிதான். அது என்று எஸ் பி அலுவலகத்தில் பெறப்பட்டது என்ற விவரம் மனுவில் இல்லை என்று சொன்னால் சரிதான். மனுவில் சொல்லியுள்ள அம்சங்கள் அனைத்தும் உண்மையற்றவை என்று விசாரித்த அதிகாரி ஒரு அறிக்கை அளித்துள்ளார் என்றால், இல்லை. அவருடைய விசாரணையில் வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தினால் நான் மேல்விசாரணை செய்யவில்லை என்று தெரிவித்துள்ளார். என்னை சிபிசிஐடி ஆய்வாளர் எப்போது விசாரணை செய்தார் என்றால், ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். தேதி பார்த்து தான் கூற வேண்டும். 12/02/2016 தேதியில் விசாரணை செய்தார். ஜெயவேல் புகார் கொடுப்பதற்கு முன்பு வேறு எந்த அதிகாரியிடமும் இது சம்பந்தமாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த மனுவினை எப்போது நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றால், 07/05/2014 தேதியில் தான் விசாரணை செய்தேன். நான் 3 நாட்களுக்குள் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆய்வாளர் பழனிக்கு உத்தரவு அளித்தேன். ஆனால் அதன்படி 3 நாட்களுக்குள் எனக்கு அறிக்கை எதுவும் வரவில்லை. பின்னிட்டு சிபிசிஐடி விசாரணை செய்து காலதாமதமாக இந்த ஆவணங்களை தயார் செய்து அனுப்பியுள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அந்த சமயத்தில் முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை. பின்னிட்டு சிபிசிஐடி போலீசார் விசாரணை செய்தபோது அவர்களது விசாரணைக்கு வலு சேர்க்கும் வகையில் இந்த ஆவணம் ஜெயவேலு

அனுப்பியது போல் பின்னிட்டு போலியாக தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த மனு ஜெயவேல் அனுப்பியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>